**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S. 102/2017**

2026=ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **Deposition of Witness for** | | **DW 1** | |
| பெயர் | ° நடராஜ முதலியார் | தொழில் | ° மளிகை |
| தந்தை பெயர் | ° வேலு | வயது | ° 87 |
| கிராமம் | ° ஆரணி | | ° |
| தாலுக்கா | ° ஆரணி | | ° |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.02.2026. நேரம் - 12.35**

சாட்சியின் அடையாளம் - ஆதார் அட்டையின் மூலம் அடையாளம் காணப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். நான் மேற்படி கிராமத்தில் வசித்து மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

**ஆவணங்கள்**

1. 17.08.2009 தேதியிட்ட வழக்கு சொத்திற்கான 'அ' பதிவேடு அசல் **பி.வா.சா.ஆ.1** ஆகவும்,
2. 11.11.2022 தேதியிட்ட தாவா சொத்திற்கான ராமலிங்க முதலியார் பெயரில் உள்ள பட்டா கணினி நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகவும்,
3. 17.04.1970 தேதியிட்ட வெங்டாசல முதலியார், பாலசுந்தரம் முதலியாருக்கு எழுதி வைத்த தான செட்டில்மென்ட் பத்திரம் உண்மை நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும்,
4. 26.06.1991 தேதியிட்ட என் பெயருக்கு சீனிவாசன் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் பதிவு நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகவும்,
5. 21.10.1991 தேதியிட்ட என் பெயருக்கு சீனிவாசன் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் **பதிவு நகல் பி.வா.சா.ஆ.5** ஆகவும்,

6. 01.12.1991 தேதியிட்ட சிவகாமியம்மாள், சபாபதி என்பவருக்கு எழுதி வைத்த உயில் உண்மை நகல் **பி.வா.சா.ஆ.6** ஆகவும்,

7. 01.12.1991 தேதியிட்ட சிவகாமியம்மாள், கமலம்மாளுக்கு எழுதி வைத்த உயில் உண்மை நகல் **பி.வா.சா.ஆ.7** ஆகவும்,

8. என் மகன் தர்மலிங்கம் தாவா சொத்திற்கு கட்டிய தீர்வை ரசீது அசல் **பி.வா.சா.ஆ.8** ஆகவும்,

9. என் வழக்கறிஞர் தயாரித்த தாவா சொத்திற்கான மாதிரி வரைபடம் **பி.வா.சா.ஆ.9** ஆகவும குறியீடு செய்யப்படுகிறது.

**பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ 9 மட்டும் வாதி வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**

**1ம் வாதி ஆஜர். வாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் - 12.55**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni